கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் ஆண்டு/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு

2017/2018 (செப்டம்பர் 2020)

**TL 1212 இலக்கியமும் மானுடவாதமும்**

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ. மானுடவாதம் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (05 புள்ளிகள்)

   ஆ. மானுடவாதக் கோட்பாடு தோன்றி வளர்ச்சி பெற்றமை குறித்து விளக்குக. (15 புள்ளிகள்)

2. அ. 20 ஆம் நூற்றாண்டில் சாதாரண மக்களை மையப்படுத்திய இலக்கியங்கள் தோன்றியமைக்கான பின்னணி யாது? (05 புள்ளிகள்)

   ஆ. பாரதியின் கவிதைகளில் மானுட விடுதலைக்கான கருத்துக்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக் காட்டுக. (15 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி விளக்குக.

   அ. கம்பராமாயணத்தில் மானுடவாத நோக்கு

   ஆ. சித்தர் பாடல்களில் மனிதநேயச் சிந்தனைகள்

   இ. வள்ளலார் பாடல்களில் பல்லுயிர் ஓம்பும் பண்பு

   (10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி- II

4. “சங்கமருவிய கால இலக்கியங்கள் மனிதநேயச் சிந்தனையின் அடிப்படையில் எழுந்தவையாகும்”. திருக்குறள் அல்லது சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (30 புள்ளிகள்)

5. பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களில் மானுடவாத நோக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறை குறித்துக் கருத்துரைக்குக. (30 புள்ளிகள்)

6. 1980 கள் முதல் ஈழத்து நவீன கவிதைகளில் மனித அவலங்கள் முக்கிய பேசுபொருளாக அமைந்துள்ளமையை கவிதைகளின் துணையோடு விளக்குக. (30 புள்ளிகள்)